Registered as a News paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண், 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 123

யாழ்ப்பாணம் வைகாசி 30 ரபியுல் ஆகிர் 29 திங்கள்கிழமை (12-6-72)

திறப்பு விழா

அன்புடையீர்!
இன்று [12-6-72] நண்பகல் 12 மணியளவில் வரும் சுபவேளையில்,
ஏ. ரி. பிரபா இன்டஸ்றி
என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க நிச்சயித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

பிரபா பீடி தயாரிப்பாளர்கள்

ஏ. ரி. பிரபா
இன்டஸ்றி
சங்கானை

## கடந்தவருட பயங்கரவாத இயக்கம்

# 41 சந்தேக நபர்கள் மீதான முதல்வழக்கு இன்றுவிசாரணை

## விபரங்களை வானொலியிலும் கேட்கலாம்

கொழும்பு இங்கள்
கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ஆயுதங் கொண்டு போராடினார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது கைதுசெய்யப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் மீதான விசாரணை இன்று காலையில் ஆரம்பமாகின்றது.

தடைசெய்யப்பட்ட ஜனதா விமுக்தி பெரமுன [மக்கள் விடுதலை முன்னணி]யின் தலைவர் என்று கருதப்படும் ரோஹண விஜயவீர உட்பட 41 சந்தேகநபர்களுக்கு எதிராக இந்த முதலாவது பிரதான வழக்குத் தொடுக்கப்படுகிறது.

பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டவர்களை விசாரிப்பதற்கென விசேஷமாக ஏற்படுத்தப்பட்டுள்ள குற்ற இயல் விசாரணைக் கமிஷன் இன்று முதல் தடவையாக தனது விசாரணையை ஆரம்பிக்கவிருக்கின்றது.

பிரதம நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ தலைமையில் கூடும் இக்கமிஷனில் நீதியரசர் ஏ. சி. ஏ. அல்லஸ், நீதியரசர் வி. சி. தாமோதரம், நீதியரசர் தெஹெறகொட, நீதியரசர் ரி. டபிள்யூ ராஜரட்ணம் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

விசாரணை ஆரம்பமானதும் அட்டோர்னி ஜெனரல் திரு வி தென்னக்கோன் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் பற்றி எடுத்துரைப்பார். அநேகமாக அவர் சிங்களத்திலேயே தமது உரையை நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. பின்னர் சந்தேகநபர்கள் மீதான குற்றச்சாட்டில் வரும் சாட்சிகளை அவர் எடுத்துரைப்பார்.

எதிரிகள் தமக்கு வழக்கறிஞர்களை அமர்த்திவாதிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் எவர்மீதாவது கொலைக்குற்றஞ் சுமத்துவதற்கு சாட்சியம் இருக்குமானால் அது சுப்ரீம் கோட்டுக்குப் பாரப்படுத்தப்படும்.

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு இந்த நாட்டில் வாழும் எந்த ஒரு நபரையும் அழைத்து விசாரிக்க கமிஷனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகள் இன்றும் செவ்வாய் புதன்கிழமைகளிலும் வானொலியில் ஒலிபரப்பப்படும்.

சிங்களச் சேவை இரவு 9-30 மணிக்கு ஆங்கில சேவை ஒன்றில் இரவு பத்து மணிக்கும் இவைகளைக் கேட்கலாம்.

## கைலஞ்சம் வாங்கியதாக மூன்று அதிகாரிகள் கைது

கொழும்பு, ஞாயிறு. கைலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த வாரம் கைத்தொழில் அமைச்சில் மூன்று அதிகாரிகள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இதுபற்றி விபரமாக ஆய்வுநடத்துவதற்கு உளவுபொலிஸ் அழைக்கப்பட்டுள்ளது.

உதவி தொழில் அமைச்சர் திரு எஸ். கே. சூரியாராச்சி கொடுத்த இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து இந்த மூன்று அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டனர்.

இம்மாதிரி இலஞ்சஊழல்கள் நெடுங்காலமாகவே இடம்பெற்றுவந்துள்ளதாக அமைச்சு கருதுகின்றது.

## உங்களுக்குப் பங்குக் காணிகள் இருக்கிறதா?

கொழும்பு, ஞாயிறு. பங்குக் காணிப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நீதிமன்றங்கள் மூலம் பங்குக் காணிகளை தெளிவாகப் பிரித்து புறம்பான உறுதிகளை வைப்பதற்கு நீண்ட காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கே இந்தவித நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக நீதியமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான விசேஷ சபை

(5-ம் பக்கம் பார்க்க)

வசந்தா வஸ்திராலயம்
VASANTHA TEXTILES
திறப்பு விழா

இன்று 12-6-72 திங்கட்கிழமை
யாழ்ப்பாணம் மக்கள் நவீனசந்தை
மேல்மாடி 20-ம் இலக்க கடை அறையில்
ஓர் விற்பனவு நிலையம் திறந்து வைக்கப்படும்.

கூறைச் சேலைகள் | பிரின்டட் நைலக்ஸ்
பட்டுச் சேலைகள் | பிரின்டட் வேலையில்சாறிகள்
பட்டுப் பாவாடைகள் | படுக்கை விரிப்புகள்
சட்டைத்துண்டுகள் | கேட்டின்துணிகள்

பட்டு வேட்டி சால்வைகள்
கைத்தறி நூற்சேலைகள்,
வேட்டி சால்வைகள்
துவாய்கள் முதலியன
இன்னும் பலவித சேட்டுகள்
மற்றும் தயாரித்த உடுபிடவைகளுமுண்டு
எங்களை மேன்மேலும் ஆதரித்து
உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள். 4237

வீரவாகு அன் கோ., திறப்புவிழா அழைப்பு

குருநாகல் எம். பி. வீரவாகு அன் கோ. ஸ்தாபனத்தினர் யாழ்ப்பாண மக்களுக்கு சேவைபுரியும் நோக்கத்துடன் யாழ்ப்பாண புதிய மத்திய சந்தையில் தமது கிளை ஸ்தாபனம் ஒன்றை இன்று (12-6-72) மாலை 4-00 மணியளவில் திறந்து நடாத்த நிச்சயித்திருக்கின்றனர். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

எம்மிடம்: பால்மா வகைகளும்; மருந்து வகைகளும்; சாய்ப்புச் சாமான்களும்; அலங்காரப் பொருட்களும் மற்றும் இதர பொருட்களும் நிதான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்!

வீரவாகு அன் கோ.,
இல. 1, புதிய மத்திய சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பவானி சினிமா**
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
**கர்ணன்**

**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
**நீதிக்குப் பின் பாசம்**

**RAJAH JAFFNA**
Daily 10-30 a. m., 4-45, 7-00 & 9-45 p. m.
Christopher Lee, Peter Cushing
in
**HORROR OF DRACULA**
( Adults only - Technicolor )

**சாந்தி** சண்டிலிப்பாய்
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
**குடியிருந்தகோயில்**

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30 6-30
சிவாஜிகணேசன் - ஜெயலலிதா
சுந்தரராஜன்—பாலாஜி
மற்றும்பலர் நடித்த
ஜெமினியின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

தினசரி காலை 10-30 இரவு 10-00
**நான் யார் தெரியுமா?**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - K.R. விஜயா
நாகேஷ் — டி. கே. பகவதி
மற்றும் பலர் நடித்த
**சபதம்**
டைரக்ஷன்: பி. மாதவன் பீ. ஏ.

உங்கள் வெகுநாள் ஆசையைப்
பூர்த்தி செய்ய!
இப்பொழுது திரையிடப்படுகிறது!

**வெலிங்டன்** (யாழ். நகர்) **லிடோ**
தினசரி பி. ப. 2-30 | மாலை 6-30 இரவு 10-00 | சனி, ஞாயிறு காலை 10-30
தினசரி காலை 10-00 | பி. ப. 2-00 மாலை 6-00 | இரவு 9-30
மற்றும்
**கெப்பிட்டல்** (கொழும்பு) **பிளாஸா**
திரைகளில்
★ சிவாஜி ★ ஜெயலலிதா
★ பாலாஜி ★ நிர்மலா
★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்தது:
ஜெயார் மூவிஸ்
**எங்க மாமா**
[ ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம் ]


## வரிவிளம்பரம்


இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5050

**தேவை**
பீடிசுற்றி அனுபவமுள்ள பெண்களும், பழக ஆர்வமுள்ள பெண்களும் தேவை. நேரில் சமூகந்தரவும். ஏ. சி. பிரபா இண்டஸ்றி. பிரதானவீதி, சங்கானை. 5085

**விற்பனைக்கு**
ஆயிரமாடி புதுவருடராசிப்பலன் ரூபா 1-50 விற்பனையாளர்கள்: காரைநகர், கைதடி, கோப்பாய், அச்சுவேலி, காங்கேசன்துறை, கீரிமலை, மயிலிட்டி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளைசி, வரத்தன். 5076

பிச்சேரூட்டு புனித கன்னியர் மடத்தின் அண்மையில் வீடு கட்டுவதற்கேற்ற நிலப்பரப்பு ஒன்று விற்பனைக்குண்டு. சான்ட் இன்வெஸ்றமென்ட், 6 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5074

நடேஸ்வராக் கல்லூரி வீதியிலுள்ள 178-ம் இலக்க வீடு விற்பனைக்குண்டு, நாலு பரப்புக்காணி குடியிருப்பு வசதியுள்ளதும். பள்ளிக்கூடங்கள் றெயில்வே நிலையம் துறைமுகம், பஸ்தரிப்பு, வாடிவீடு முதலியன கிட்டுமானதும். வாங்க விரும்புவோர் என்னிடம் தொடர்பு கொள்ளவும். வ. ஐயாத்துரை, பிரபல வர்த்தகர், துறைமுகத்திற்கு முன்பாக, காங்கேசன்துறை. 5082

மொடல் நம்XV "அம்பாஸ்" மேப்பெக்கோடர் பெட்டரியிலும், மின்சாரத்திலும் இயங்குவது. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். நம். 561, கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். 4240

**நியூ கலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
**பெரிய இடத்துப் பெண்**

**நாகராஜ்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நடித்த
**மாட்டுக்கார வேலன்**
தினசரி 4-30 மட்டும்
PARIS CHAMPAGNE
[வயது வந்தவருக்கு]

**REGAL** (Jaffna)
Daily 5-15 & 7-15 p m.
Christopher Jones
Pia Pegermark
in
**THE LOOKING GLASS WAR**
(Panavision-color)
தினசரி 2-00 இரவு 9-45
ராஜ்கபூர்-நர்கிஸ்
நடித்த
**அவன்**

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Sat. Sunday 10-30
Alfred Hitchcock's
"PSYCHO"
(Strictly for Adults)


குடியரசுக்கு விசுவாசம் தெரிவிக்கும்

# ஆங்கில பிரசுரங்களிலும் அதே மாதிரிப்பிழைகள்?

கொழும்பு, திங்கள்
கொழும்பு நீதிமன்றங்களில் பணியாற்றும் வழக்கறிஞர்கள் இனி புதிய குடியரசுக்கு விசுவாசம் தெரிவித்து ஆங்கிலத்தில் எடுத்துக் கொண்ட விசுவாசப்பிரமாணங்களில் ஒரு பிழை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் விசுவாசப் பிரமாணம் எடுப்பதற்காக அச்சடிக்கப்பட்டிருந்த பிரசுரங்களில் புதிய குடியரசுக்கும் அரசியல் சட்டத்துக்கும் விசுவாசம் தெரிவிக்கும் வாசகங்கள் இடம்பெறவில்லையாம்.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் விசுவாசப் பிரமாணம் எடுப்பதற்காக அச்சடிக்கப்பட்டிருந்த தமிழ்ப் பிரசுரங்களிலும் இப்படியான பிழைகள் ஏற்பட்டிருந்ததாக முன்னர் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மீண்டும் விசுவாசப்பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கும் என்று தெரிகின்றது.

# "ஆலயங்களில் தேவையற்ற நிகழ்ச்சிகளைப்போக்குவோம்"

நாவடி, ஞாயிறு
'மனதிற்கு இன்பத்தைக் கொடுத்து இறைவனை நினைக்கவைக்கவல்ல தெய்வீகப் பாடல்களைப் பாடுதலாலும், தெய்வீக அருள் பொலிவதான பேச்சுக்களைக் கேட்பதாலும் உள்ளத்துக்கும் உயிருக்கும் பேரின்பம் கிடைக்கிறது. கோயில்களிலே இவ்வின்பத்தைப் பெறுவதற்காகவே இறைவன் புகழ் பாடுதலும் - பேசுதலும் நடைபெற்று வருகிறதென்பதை நாம் மனதிற்கொள்ளுதல்வேண்டும். ஆயினும் தற்போது ஆலயங்களிலே அதேசமயத் தேவையற்ற பல நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருவதையும்காண முடிகிறது. இவற்றைப் போக்கி திருமுறைகள், திருப்புகழ், அருட்பாடல்கள் போன்றவற்றை ஓதியும் பேசியும் வருவதால் உற்சவங்களின் போது பெருமானின் மஞ்சத் திருத்திய உண்மையை நாம் எல்லோரும் அறியமுடியும்'.

சொக்குவில் மாத்தனை முருகன் ஆலயத்தில் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்திற்கு வைத்தியகலாநிதி திரு. சி. க. சிவஞானரத்தினம் தலைமை வகித்தார்.

...

## விளையாட்டுப் போட்டி

உடுவில், ஞாயிறு
பாடசாலையில் பழகும் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றி தோல்விகளைக்கண்டு நிலை தடுமாறுமை போன்ற நற்பழக்கங்களை மாணவர்கள் தம் வாழ்க்கையிலும் கைக்கொண்டொழுக விளையாட்டு உதவுகின்றன்.

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் திரு. இ. இராஜேந்திரன் பேசும்போது குறிப்பிட்டார். மேற்படி கல்லூரி அதிபர் திரு. கே. கயிலாயநாதன் விழாவுக்குத்தலைமை வகித்தார்.

விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவ-மாணவிகளுக்கு திரு. இ. இராஜேந்திரன் பரிசில்கள் வழங்கினார்.

விளையாட்டுக்களில் ஸ்கொட் இல்லம் 183 அரைப்புள்ளிகள் பெற்று முதலிடத்தையும், பேஜ் இல்லம் 163 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், பிக்னல் இல்லம் 142 அரைப் புள்ளிகள் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.


யாழ்ப்பாண
மாநகரசபை
**ஏல விற்பனை**

நான்கு எண்ணற்பீட மேசைகளும் நாலு இறைச்சி வைத்து வெட்டும் மரத்துண்டுகளும் 22-6-72-ம் திகதி காலை 10-30 மணியளவில் யாழ் புதிய மத்தியசந்தையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரர் உடனே முழுப் பணத்தையும் ஏலவிற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் செலுத்தி ஒப்புக்காரலத்திற்குள் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏ. சி. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம். 4236

**யாழ் தியேட்டர்**
(காங்கேசன்துறை
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-சகுந்தலா
நடித்த
**சி. ஐ. டி. சங்கர்**

# திருமண அழைப்பு

**த. சரவணபவானந்தன் — இராசராசேஸ்வரி**

உடுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த சரவணபவானந்தன் (தொழில் நுட்ப ஆசிரியர், வற்றாப்பளை மத்திய மகாவித்தியாலயம்) அவர்களுக்கும், இராசராசேஸ்வரி அவர்களுக்கும் 12-6-72 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமணம் நடைபெறும். திருமண வைபவத்திற்கு வருகைதருமாறு எல்லா நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். 4173


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னை வெட்டும் கோடரியிடமும் மறைக்காது தன் நறுமணத்தைத் தரும் சந்தன மரத்தைப் போன்றவன் நேர்மையான மனிதன்.

— துளசிதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] பரிதாபி வருடம் வைகாசி மாதம் 30-ம் திகதி (12-6-72)


## கல்வி அமைச்சின் வேண்டுகோள்

நமது நாட்டின் அரசியல் வானில் இன்று மிகவும் வேதனைதரும் ஒரு நிலைமை உருவாகியிருக்கின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளுகின்ற உறுப்பினர்களும் அரசியல் தலைவர்களும் ஆயுதம் தாங்கிய பொலிசாரினால் பாதுகாக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தமான ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது சுதந்திரமான ஒரு நாட்டின் பொதுவாழ்வுக்கு பெருமையளிப்பதாய் இல்லை. சிறப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசியல் அமைதியின்மையைத் தூண்டும் சம்பவங்களைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகின்றது. இதற்குத் தொடர்பாகக் கருதக்கூடிய இன்னொரு காரணத்தையும் குறிப்பிட்டுள்ளது.

தமிழ் மாணவர்கள் சிறப்பாக வடக்கிலும் கிழக்கிலும் உள்ளவர்கள் அரசியல்வாதிகளாலும் கல்வி நிபுணராக வேஷம் போடும் தனிப்பட்டவர்களாலும் தவறான வழிகளில் இழுத்துச் செல்லப்படுகிறார்களென்பது கல்வி அமைச்சின் கருத்து. இது உண்மையானால் தமிழ் மாணவ சமூகத்துக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் எவ்வளவு ஆபத்தென்பது சொல்லாமலே புரியும். அதை விடத் துரோகமான அரசியல் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு பற்றி கல்வி அமைச்சர் மட்டுமல்ல இப்பகுதிகளின் ஆசிரியர்களும் பெற்றோர்களும் சமூகத் தலைவர்களும் ஒன்றுபட்டு ஆராய வேண்டிய விஷயம். சுயநல அரசியல்வாதிகள் தங்கள் முயற்சிகளுக்கு மாணவர்களைப் பயன்படுத்த முனைதல் நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பாகும். இந்த விளையாட்டு தமிழ் அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல. நாட்டில் உள்ள பலருக்கும் புதிய விஷயமல்ல. ஆட்சியில் நுழைவதற்கு மாணவர்களை இளைஞர்களை என்ற முறையில் பயன்படுத்திக் கொள்ளாத எம்பிக்களே இல்லையென்று சொல்லலாம்.

ஆயினும் துவேஷமான அரசியல் முயற்சிகளுக்கு வருங்காலச் செல்வங்களை விளம்பரம்பண்ணும் பாதகச்செயலை பெற்றோர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். பல்கலைக்கழகப் பிரவேச விஷயத்தில் 1970-ம் ஆண்டு புள்ளிகளைத் தரப்படுத்தும் திட்டம் புகுத்தப்பட்டது. தமிழ் மாணவர்களுக்கு அதிருப்தி ஏற்படுத்தியது முக்கிய காரணமாயிருக்கலாமென்று கல்வியமைச்சு கருதுகிறது. அதை நீக்கி தாமெடுத்துள்ள புதிய நடவடிக்கைகள் சிறப்புத் திறமை ஒன்றுக்கே தனியான மதிப்பைக் கொடுக்குமென்று கல்வி அமைச்சு உறுதியளித்திருக்கிறது. மாணவரின் மனநோய்க்கு மூலகாரணமானவர்களோ அதற்குப் பரிகாரத்தையும் தேடவேண்டியது பொறுப்பாகும்.

தமிழ்ப்பகுதிகளிலே பயங்கரவாதம் தலையெடுப்பதென்பது இங்கு வாழும் சமூகங்களின் சரித்திரத்துக்கு முரணான விஷயம். கஷ்டப்பட்டு உழைக்கும் மாணவர்கள் அதற்குரிய பலனைப் பெறாவிட்டால் மனமுடைந்து போவது இயல்பு. இதைப் பயன்படுத்தும் தீய சக்திகள் தலையெடுக்காமல் தடுப்பது கல்வியில் ஈடுபடும் ஆசிரியர்கள் - பெற்றோர்களின் முதற்கடமை.

கல்வியில் அரசியல் தலையீடு பெரும் பாதகத்தை உண்டுபண்ணுதல் என்பது பழங்கதையாய் விட்டது. மாணவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள். சிந்திக்கும் சக்தி படைத்தவர்கள். இலேசாகத் துரோகச்செயலில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் பிழையான வழியில் போகநேரிட்டால் அதன் முழுப்பொறுப்பையும் பெரியோர்கள் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியதே.

## கோவில் மறியல்

தமிழகத்திலே ஆலய வாசல்களில் மறியல் நடைபெறப்போகிறதாம். கோவில்களில் சென்று வழிபடக்கூடாதென்று இம்முறை தடையிலே மறியல் இயக்கத்தை ஈ.வே.ரா. பெரியாரின் திராவிடர்கழகத்தார் நடத்தப்போவதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

கோவில்களுக்கும் கோபுரங்களுக்கும் தமிழகம் உலகப் புகழ்பெற்றது. தமிழகத்தின் பெருமைக்கு அங்குள்ள உன்னதமான கோவில்கள் பெரிதும் காரணமாகும்.

அப்படி இருந்தும் அங்கு கோவில் மறியல் நடப்பானேன்? நடப்பதெல்லாம் நன்மைக்கே என்றும் எல்லாம் இறைவன் செயல் என்றும் சொல்லும் ஆஸ்திகர்களும் இதற்குக் கூறக்கூடிய காரணமென்ன?

எந்த நோக்குடன் தமிழ் மன்னர்கள் அக் கோவில்களைக் கட்டினார்களோ அந்த நோக்குப்படியான அறங்கள் அங்கு நடைபெறுகின்றனவா? சமூகத்தின் குறைகளை நீக்கக்கூடிய தர்மங்களின் நிலை என்ன? இதைப்பற்றி சற்றே சிந்திப்பின் ஆஸ்திகர்கள் பெரும்பாலும் சமூகத்துக்குப் பயனற்றவர்களை உணரலாம்.

அதிர்ச்சி வைத்தியம் செய்வதில் பெரியார் ஈ.வெ.ரா. புகழ்பெற்றவர். பிள்ளையார் விக்கிரகங்களை உடைக்கும் இயக்கத்தை ஆரம்பித்தார். தமிழகத்தில் விநாயக தத்துவம் பரவி பிள்ளையார் வழிபாடு புத்துயிர் பெற்றது. ராமாயணத்தை எரிக்கச்செய்தார். கம்ப ராமாயண விழாக்களும் கருத்தரங்குகளும் அதிகம் நடக்கின்றன.

அதுபோல இப்போது அவர் ஆரம்பிக்கும் ஆலய மறியல் தமிழகத்திலே ஆலய வழிபாடு அதிகரிக்கவும் ஆலயங்கள் புத்து [illegible] படவும் கடிகோலும் [illegible] யும் என்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

# நல்லடியார் துயர் தீர்க்கும் நயினை நாகபூஷணி உற்சவம் இன்று ஆரம்பம்

— நயினையூர் நாக. குமாரசூரியர் —

சரித்திரகாலத்திற்கு முன்தொட்டே பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டுவந்த பெரும்புகழுடையது நயினாதீவு. நயினாதீவு சரித்திர இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. 'மணிபல்லவம்' எனப் பல ஆராய்ச்சியாளர்களாலும் போற்றப்பட்டுவந்துள்ளது.

'கடுகு சிறிதெனினும் காரம் பெரிதென்ற' முதுமொழிக்கிணங்க அளவாற் சிறியதெனினும், தொல்புகழார்ந்த தலைசிறந்த தீவாகக் கருதப்படுகின்றது. இச்சிறு [illegible] அழகிய தீவின் கண்ணே 'பால்நினைந்தூட்டுந் தாயினுஞ்சாலப் பரிந்து' திருவருள் பாலிக்கின்ற சர்வலோக நாயகியாகிய ஸ்ரீநாகபூஷணி அம்பாள் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். அம்பிகையின் ஆலயஅமைப்பும் அதன் வனப்பும் எவரையும் தம்வசமாக்கும் தனித்துவம் வாய்ந்ததாகும். வானுற ஓங்கிநிற்கும் வண்ண இராஜகோபுரமும், அதன் மீது பறக்கும் நாகக்கொடிகளும் அலைகடலில் மிதந்து வருங்கடல் நாவாய்களும் அடியார்களை அழைப்பது போன்ற காட்சியளிக்கின்றன.

இவ்வாலய வரலாற்றைப் பற்றிப் பற்பல ஆராய்ச்சியாளர்களும் கல்விமான்களும் புலவர் சிகாமணிகளும் தங்கள் தங்கள் கருத்துக்களை இட்டியவாறு கூறியுள்ளார்கள். இந்தியாவைச் சேர்ந்த புதைபொருளாராய்ச்சி நிபுணர் திரு. நரசிம்மன் இலங்கைக்கு வருகை தந்தபோது இவ்வாலயத்தையும் பார்வையிட்டு ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூலஸ்தான விக்கிரகத்தை ஆராய்ந்தபோது விக்கிரகத்தின் காலத்தை அளவிட முடியாதிருக்கிறதெனவும் ஆனால் இவ்வாலயத்தின் சுற்றுமண்டபத்தைப் புதைபொருளாராய்ச்சி மூலம் பார்த்தால் ஓரளவு கண்டுபிடிக்கலாமெனவும் கூறினார். இக்கோயிலைப்பற்றிய பூர்வீகக் கதைகள் பலவுண்டு. இம்மிருக்கும் தெய்வத்தைத்தான் 2-ம் நூற்றாண்டில் கயவாகு மன்னன் நிலைநிறுத்திப் பத்தினிக் கடவுளாக வழிபட்டான் என்பர்.

அம்மையை வழிபடுவதால் அநேக பிணியாளர்கள் சுகமடைவதாகவும், குழந்தைப் பேறற்றவர்கள் அப்பேற்றை அடைவதாகவும், சர்ப்ப தோஷங்களினால் பாதிக்கப்படுபவர்கள் அத்தோஷத்திலிருந்து பாதுகாக்கப்படுவதாகவும் பக்தர்கள் தீவிர நம்பிக்கை கொண்டுள்ளனர். சாதாரண நாட்களிலும் திருவிழாக் காலங்களிலும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வருகை தந்து வழிபாடு செய்து வேண்டிய வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்வதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். ஆண்டு தோறும் ஆனி மாதத்தில் நடைபெறும் மகோற்சவத்தில் கலந்து தங்கள் பிறவிப்பிணியை நீக்குவதற்காக நாட்டின் பல பாகங்களிலுமிருந்து யாத்திரிகர்கள் வந்து கூடுவார்கள். தேர்த் திருவிழா தனிச் சிறப்புப் பெற்றது. ஈழத்திலே மிகவும் திறமையான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த அழகிய அலங்காரத் தேரின் மீது அம்பாள் பவனிவரும் காட்சியைக் கண்டவர்கள் தம்மை மறந்து ஆனந்தவெறிகொண்டு நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெற்றுத் தெப்போற்சவத்துடன் முடிவெய்தும். வழமைபோல் இம்முறையும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வருகை தருவார்களென எதிர்பார்த்து அரசினரும், ஆலய நிர்வாகஸ்தர்களும், அன்னதான சபையாரும், பொது ஸ்தாபனங்களும் போக்குவரத்து குடிதண்ணீர் உணவு சுகாதாரம் பாதுகாப்புப் போன்ற வசதிகளைச் செய்துள்ளார்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாகேஸ்வரத்து நாகேஸ்வரி

— நயினை வே. நாகராசா —

நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, காரைதீவு, மண்டைதீவு என்னும் எழுதீவுகளுக்குள் நடுவே இருப்பது நயினாதீவு. மகாகவி காளிதாசர் இதனைத் தமது கவியில் கூறும்போது 'சப்த தீவுகளுக்கு நடுவே முத்துப் போல் விளங்குவது மணித்தீவு' என்றார். இதன் பழைய பெயர்களில் மணித்தீவு என்பதும் ஒன்று. மணித்தீவு பின்னர் மணிபல்லவத்தீவு என மாறியது. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை என்னும் நூலின்கண் சிறப்பும் மணிமேகலா தெய்வம் என அழைக்கப்படும் நாகபூஷணி அம்மன் புகழும் பரந்து விளங்குகின்றது. 'திரை உடுத்த மணிபல்லவம்' என மணிமேகலை கூறுகிறது.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம் என்னும் ஸ்வரங்கள் போல் நயினாதீவு 'நாகேஸ்வரம்' என அழைக்கப்பட்டது. நாகேஸ்வரம் என அழைத்தபோது இவ்வம்மை நாகேஸ்வரி என அழைத்தார்கள், இன்றும் இப்பெயர் கொண்டே அழைக்கிறார்கள்.

நாகர் என்னும் இனம் இலங்கையில் வாழ்ந்தபோது நயினாதீவிலும் வாழ்ந்தார்கள். அவர்கள் நாகபாம்பை வழிபடுவார்கள். நாகத்தின் ஈஸ்வரியான தெய்வம், நாகர்களின் குலதெய்வமாகப் போற்றப்பட்டாள். நாகர்களிடையே அடிக்கடி ஏற்பட்ட யுத்தத்தைத் தடுத்து சமாதானம் ஏற்படுத்தும் நோக்கமாக புத்தர் பிரான் நயினாதீவுக்கு வந்தார் என்று மகாவம்சம் கூறுகிறது. நாகர் இனமும் நாக வழிபாடும் இங்கே இருந்தமையால் இத்தீவு மகாவம்ச நூலில் 'நாகதீப' என அழைக்கப்படுகிறது.

பிற்காலத்தில் நயினாப்பட்டர்கள் வாழ்ந்தார்கள். அப்பொழுது இத்தீவு நாக நயினாதீவு எனப் பெயர் பெற்று ஈற்றில் மருவி நயினாதீவு என அழைக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் வாணிபம் நடைபெற்ற காலை நயினாதீவு ஒரு மிதக்கல் போல் விளங்கியது என்பதை பூகோளரீதியாகவும் இங்குள்ள கடலில் கண்டெடுக்கப்பெற்ற கற்சாசனங்களாலும் அறியக் கூடியதாக இருக்கிறது.

புராணகாலம், இதிகாசகாலம், சங்ககாலம் பலவற்றைக் கண்ட இத்திருப்பதியின் கண்ணே எழுந்தருளியிருக்கும் நாகபூஷணி அம்பாள் நம்பினோர்களுக்கு அருள் புரிந்து அவர்கள் குறைகளை நீக்கி நற்பேறு நல்கினாள். குழந்தையின் வாழ்வில் தாய் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறாளோ அதுபோல் உலகில் உள்ள ஆன்ம கோடிகளாகிய குழந்தைகளுக்கு நயினை நாகபூஷணி தாயாக இருந்து அருள்மழை பொழிகிறாள்.

நாகபூஷணி அம்மனின் சரித்திர சித்திர தேர்த்திருவிழாக்காட்சி காண்போர் கண்களைக் கொள்ளை கொள்ளும். அரோகரா... அரோகரா... என்ற ஒலி எங்கும் ஒலித்த வண்ணமிருக்கும். அம்மன் அழகிய தேரில் வரும் திருக்கோலம் அன்பர்கள் அகப்பிணியை நீக்குவதற்கு கோவிலின் தெற்குப் புறத்தே அன்னதானத் திருப்பணியும் அவள் அருளால் வருடாவருடம் சிறப்பாக நடைபெறுகிறது.

## தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம், திக்கம் வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே [illegible] தமிழ்த்தினப் போட்டி வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் இருபத்தொரு பாடசாலையின் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

அங்கு நடைபெற்ற போட்டிகளில் பல இடங்களை யாழ். அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

இ. நாகேஸ்வரி, க. புஷ்பராணி, மா. இராசநாதன், க. கௌரி, க. புஷ்பராணி, த. உருத்திரசிங்கம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org